*World Christian Fellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com

# தேவனுடைய ராஜ்யம் 07

## ராஜ்யத்தின் மக்கள்

*பூமியில் உள்ள தேவனுடைய ராஜ்யம் என்பது அது உலகளாவிய சபையை கொண்டது, அதை கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுகிறது. அது உலகம் முழுவதும் உள்ள மீண்டும் பிறந்த விசுவாசிகளால் உருவாகிறது.*

*நாம் தேவனுடைய குடும்பம்,கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் அவருடைய பிள்ளைகள்,அவருடைய குமாரர் மற்றும் குமாரத்திகள் ,கிறிஸ்துவுடன் கூட்டு வாரிசுகள் ஆவோம்.*

### *a)* அவருடைய பிள்ளைகள்

*நீங்கள் மீண்டும் பிறப்பதால் நீங்களும் அவருடைய ராஜ்யத்தில் ராஜாக்களாகிறீர்கள்!*

*நீங்கள் ஏதோ நன்மை செய்தவர்கள் என்பதால் அல்ல, மீண்டும் பிறப்பதால் அவருடைய குடும்பத்தில் இணைந்தீர்கள்!*
**ரோமர் *8:16,* நாம் தேவனுடைய பிள்ளை களாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.**

***குமாரத்திகளுமாயிருப்பீர்களென்றுசர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.***

### *b) தேவனுடைய வாரிசுகள்*

*இந்த ராஜ்யத்தின் செல்வம் உங்களுக்குத் தெரியும்.*
*தேவனுக்கு ஒரே மகன் இருந்தார்! இப்பொழுது நீங்கள் அவருடைய குடும்பத்தில் பிறந்து இருக்கிறீர்கள்!*

*நீங்கள் இயேசு கிறிஸ்துவுடன் கூட்டு வாரிசு! எனவே இந்த ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்கு நமக்கு கிடைக்கக்கூடிய சொத்துக்களை கற்பனை செய்து பாருங்கள்!*

***ரோமர் 8:17, நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப் படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.***

***கலாத்தியர் 3:29, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.***

***தீத்து 3:7, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.***

***1 பேதுரு 1:4, அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.***

### *c)* ஆசீர்வதிக்கப்பட்டோம்

***எபேசியர் 1:3, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.***

*வேதம் சொல்லுகிறது, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (**மத்தேயு 6:33**).*

*தேவனுடைய காரியங்கள் ஒருவரின் வாழ்க்கையில் முதலாவதாக இருக்க வேண்டும்.ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது, இன்னோரு வகையில் சொல்லவேண்டுமானால் தேவன் செய்த எல்லாமே அல்லது கிறிஸ்துவுக்குள் செய்த எல்லாமே நம்முடைய லாபத்திற்காக தான்.*

### *எபேசியர் புத்தகத்தில் உள்ள சில ஆசீர்வாதங்கள்*

1. *பிள்ளைகளாக தத்தெடுக்கப்படுதல் 1:5*
2. *அன்பில் ஏற்றுக்கொள்ளப்படுதல் 1:6*
3. *அவரின் ரத்தத்தின் மூலம் மீட்கப்படுதல் 1:7*
4. *பரிசுத்த ஆவியானவரால் முத்தரிக்கப்படுதல் 1:13*
5. *உன்னதங்களில் உட்காருதல் 2:6*
6. *கிருபையினால் விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டோம் 2:8-9*
7. *இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவனிடம் நெருங்குதல் 2:13*

